Registered as a Newspaper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    ஆடி 26    [ 10-08-1993 ]    செவ்வாய்க்கிழமை    ஓசை 173

## லேசர்மூலம் கண் அறுவைச் சிகிச்சை 45 வினாடிகளில் பூர்த்தியாகும்

[சென்னை]

குறும்பார்வைக் குறைபாட்டை 45 வினாடிகளில் லேசர் மூலமாக அறுவைச்சிகிச்சையின்றி குணப்படுத்தக் கூடிய மருத்துவமுறை சென்னையில் நடைமுறைக்கு வந்துள்ளது. சுமார் ஒன்றரைக்கோடி ரூபா செலவில் அமெரிக்காவிலிருந்து இறக்குமதியான இந்தக் கருவி 40 வயதுக்கு குறைவானவர்களுக்கு ஏற்படக்கூடிய கிட்டப்பார்வைக் குறைபாட்டை நீக்கும். கண்ணாடிகள், கொன்டக்ட் லென்சுகள் ஏதும் இன்றி கண் குறைபாட்டை நீக்கக்கூடியதாக இந்த லேசர் சிகிச்சை விளங்குகிறது.

## ( இனப் பிரச்சினைக்கான தீர்வில் )

# ஐ.நா. சபை மத்தியஸ்தம் நிராகரிப்பு; மேற்குலக ராஜதந்திரிகள் ஏமாற்றம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மத்தியஸ்தத்தின் கீழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் உலகளாவிய ஒத்துழைப்பிற்கான அமைப்பின் திட்டத்தை சிறிலங்கா அரசாங்கம் நிராகரித்ததையிட்டு அதிர்ச்சியும், மேற்கு நாடுகள் ஏமாற்றமும் அடைந்துள்ளன. ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வெளிநாடுகளின் உதவி பெறப்படும் எனக் கூறி சில தினங்களுக்குள்ளேயே இத்திட்டத்தை நிராகரித்தமை அவர்களுக்கு கவலை அளித்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அமைப்பு முறையுடன் கூடிய தீர்வொன்றைக் காணவும், யுத்த நிறுத்தத்தை கண்காணிக்க ஐ நா. சபையின் படைகளை இலங்கைக்குள் அனுமதிக்க வேண்டும் எனவும் உலகளாவிய ஒத்துழைப்பிற்கான அமைப்பைச் சேர்ந்த நோபல் பரிசு பெற்ற நால்வர் தயாரித்த திட்டத்தை சிறிலங்கா அரசாங்கம் நிராகரித்தமை தெரிந்ததே. இத்தீர்வுத் திட்டம் புலிகளுக்கு ஆதரவானது எனவும் அரசாங்கம் தெரிவித்திருந்தது.

இது குறித்தே மேற்குலக நாட்டு இராசதந்திரிகள் அதிர்ச்சியும், ஏமாற்றமும் அடைந்துள்ளனர். இனப்பிரச்சினைக்கு அண்மையில் அரசியற் தீர்வு ஒன்று ஏற்படுவதற்கான சூழ்நிலை எவையும் காணப்படாத நிலையில் இத்தீர்வு திட்ட யோசனைகளையும் அரசாங்கம் நிராகரித்தமையே

( 4 ஆம் பக்கம் பார்க்க)

## இளாலி-பூநகரி படகுச்சேவை

இளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

## தபால்கள் பெறலாம்

காரைநகரில் இருந்து இடம் பெயர்ந்துள்ளமக்களின் சாதாரண, பதிவுத்தபால்கள் அனைத்தும் கப்பல் மூலமாக நியம காரைநகரில் இருந்து தமக்குக் கிடைத்துள்ளதாகவும் அக் கடிதங்களை இடம் பெயர்ந்துள்ள காரைநகர் மக்கள் அனைவரும் சுழிபுரம் தபாலகத்தில் இயங்கும் காரைநகர் தபாற்கந்தோரில் பெற்றுக்கொள்ளுமாறும் தபாலதிபர் கேட்டுக்கொள்ளுகின்றார்.

## கைக்குண்டு வெடித்து பலாலியில் சிப்பாய் பலி

பலாலி இராணுவச் சிப்பாய் ஒருவர் கைக்குண்டு ஒன்று தவறுதலாக வெடித்ததில் உடல்சிதறிப் பலியானார்.

கடந்த 26ஆம் திகதி பலாலி இராணுவ முகாமில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பண்டுவஸ்நுவர கட்டிபொல வைச் சேர்ந்த சோமபால (வயது 29) என்ற இராணுவ சிப்பாயே பலியானவராவார்.

இவர் கடமையில் ஈடுபட்டிருந்த போது இவரது இடுப்பில் இருந்த கைக்குண்டு ஒன்று தவறுதலாக வெடித்ததில் கொல்லப்பட்டார் என இராணுவ தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

## மன்னார்-வவுனியா வீதியில் இராணுவ வேலி அமைப்பு

மன்னார் - வவுனியா வீதியில் இராணுவத்தினர் தொடர் காவலரண்களை அமைத்து இராணுவவேலி ஒன்றை நிறுவியுள்ளனர். இப்பகுதியில் கட்டுபொத்த, கந்துருவெல, வீரவெல ஆகிய படை முகாம்கள் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டுவிட்டமையினால் காவலரண்களை மட்டும் அமைத்து ஓர் இராணுவ வேலியை படையினர் அமைத்துள்ளனர்.

புதிய முகாம்கள் அமைக்கப்பட்டால் முகாம்கள் தாக்கப்படலாம் என்ற காரணத்தினாலேயே காவலரண்கள் படையினரால் அமைக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

## மூளாய் பகுதியை நோக்கி படையினர் ஷெல் தாக்குதல்

காரைநகரில் நிலைகொண் ... இத்தாக்குதல் புதல் 12.00

## மட்டு மாவட்டத்தில் மேலும் ஏழு முகாம்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் 7 இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் ... கப்படும் வாகரைப் பகுதியிலேயே இந்த 7 முகாம்களும் படையினரால் அமைக்கப்பட்டுள்ளனவாம்.

இவை வாகரை, கதிரவெளி, வம்மிவெட்டுவான், பனிச்சங்கேணி, கிருமிச்சை, மாங்கேணி, காயங்கேணி, ஆகிய

## பரீட்சை வினாத்தாள்கள் இன்று வந்து சேரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் க. பொ. த உயர்தரப் பரீட்சைக்கான இரண்டாம் தொகுதி வினாத்தாள்கள் மற்றும் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெற இருக்கும் 5 ஆம் ஆண்டிற்கான புலமைப் பரிசில் பரீட்சைக்கான வினாத்தாள்களும் இன்று யாழ். கல்வித்திணைக்களம் எடுத்து வரப்படவுள்ளன.

மேற்படி வினாத்தாள்களில் பிரயோக கணித பாடத்திற்

(4ஆம் பக்கம் பார்க்க)

## நேர்முகப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டது

எழுதுநர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைகளுக்கும் ஆட்சேர்ப்புக்காக வடக்கு கிழக்கு மாகாண சபையினால் 1993-08-15, 1993-08-20-ம் திகதிகளில் நடைபெற உள்ள நேர்முகப் பரீட்சை இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இதே வேளை இந்நேர்முகப்பரீட்சை யாழ். செயலகத்தில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதற்கான திகதிகள் காலகதியில் அறிவிக்கப்படும். இதன்நிமித்தம் பரீட்சார்த்திகள் திருக்கோணமலைக்குசெல்லத்தேவையில்லை என யாழ். அரசாங்க அதிபர் அறியத்தருகின்றார்.

## கற்பூரம் எடுத்து வந்தவர் இராணுவத்தால் கைது

வவுனியா தாண்டிக்குளம் தடை முகாமூடாக கற்பூரம் எடுத்துவர முயன்றதாக கூறி நேற்று ஒருவர் சிறிலங்கா ... சேர்ந்த கனகு என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவராவார்.

இதேவேளை வெற்று உரப்

கடந்த 26ஆம் திகதி பலாலி இராணுவ முகாமில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பண்டுவஸ்நுவர கட்டிபொல வைச் சேர்ந்த சோமபால

பில் இருந்த கைக்குண்டு ஒன்று தவறுதலாக வெடித்ததில் கொல்லப்பட்டார் என இராணுவ தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

டத்தை நிராகரித்தமை அவர்களுக்கு கவலை அளித்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அமைப்பு முறையுடன் கூடிய தீர்வொன்றைக் காணவும், யுத்த நிறுத்தத்தை கண்காணிக்க ஐ நா. சபையின் படைகளை இலங்கைக்குள் அனுமதிக்க வேண்டும் எனவும் உலகளாவிய ஒத்துழைப்பிற்கான அமைப்பைச் சேர்ந்த நோபல் பரிசு பெற்ற நால்வர் தயாரித்த திட்டத்தை சிறிலங்கா அரசாங்கம் நிராகரித்தமை தெரிந்ததே. இத்தீர்வுத் திட்டம் புலிகளுக்கு ஆதரவானது எனவும் அரசாங்கம் தெரிவித்திருந்தது.

இது குறித்தே மேற்குலக நாட்டு இராசதந்திரிகள் அதிர்ச்சியும், ஏமாற்றமும் அடைந்துள்ளனர். இனப்பிரச்சினைக்கு அண்மையில் அரசியற் தீர்வு ஒன்று ஏற்படுவதற்கான சூழ்நிலை எவையும் காணப்படாத நிலையில் இத்தீர்வு திட்ட யோசனைகளையும் அரசாங்கம் நிராகரித்தமையே

( 4 ஆம் பக்கம் பார்க்க)

தரப் பரீட்சைக்கான இரண்டாம் தொகுதி வினாத்தாள்கள் மற்றும் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெற இருக் எடுத்து வரப்படவுள்ளன.

மேற்படி வினாத்தாள்களில் பிரயோக கணித பாடத்திற்

(4ஆம் பக்கம் பார்க்க)

# மன்னார்-வவுனியா வீதியில் இராணுவ வேலி அமைப்பு

மன்னார் - வவுனியா வீதியில் இராணுவத்தினர் தொடர் காவலரண்களை அமைத்து இராணுவவேலி ஒன்றை நிறுவியுள்ளனர். இப்பகுதியில் கட்டுபொத்த, கந்துருவெல, வீரவெல ஆகிய படை முகாம்கள் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டுவிட்டமையினால் காவலரண்களை மட்டும் அமைத்து ஓர் இராணுவ வேலியை படையினர் அமைத்துள்ளனர்.

புதிய முகாம்கள் அமைக்கப்பட்டால் முகாம்கள் தாக்கப்படலாம் என்ற காரணத்தினாலேயே காவலரண்கள் படையினரால் அமைக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

# மட்டு மாவட்டத்தில் மேலும் ஏழு முகாம்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் 7 இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக இராணுவ தரப்பில் தெரிவிக்கப்படும் வாகரைப் பகுதியிலேயே இந்த 7 முகாம்களும் படையினரால் அமைக்கப்பட்டுள்ளனவாம்.

இவை வாகரை, கதிரவெளி, வம்மிவெட்டுவான், பனிச்சங்கேணி, கிருமிச்சை, மாங்கேணி, காயங்கேணி ஆகிய பகுதிகளிலேயே அமைக்கப்பட்டுள்ளனவாம்.

# நேர்முகப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டது

எழுதுநர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைகளுக்கும் ஆட்சேர்ப்புக்காக வடக்கு கிழக்கு மாகாண சபையினால் 1993-08-15, 1993-08-20-ம் திகதிகளில் நடைபெற உள்ள நேர்முகப் பரீட்சை இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இதே வேளை இந்நேர்முகப்பரீட்சை யாழ். செயலகத்தில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதற்கான திகதிகள் காலகதியில் அறிவிக்கப்படும். இதன்நிமித்தம் பரீட்சார்த்திகள் திருக்கோணமலைக்குசெல்லத்தேவையில்லை என யாழ். அரசாங்க அதிபர் அறியத்தருகின்றார்.

# மூளாய் பகுதியை நோக்கி படையினர் ஷெல் தாக்குதல்

காரைநகரில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மூளாய்பகுதியைநோக்கி நேற்று பரவலான எறிகணைத் தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதல் பகல் 12.00 மணியளவில் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலின் போது ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

# கற்பூரம் எடுத்து வந்தவர் இராணுவத்தால் கைது

வவுனியா தாண்டிக்குளம் தடை முகாமூடாக கற்பூரம் எடுத்துவர முயன்றதாக கூறி நேற்று ஒருவர் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாளிகை, ஓமந்தையைச் சேர்ந்த கனகு என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவராவார்.

இதேவேளை வெற்று உரப் பையை வைத்திருந்தமைக்காக வவுனியா – மன்னார் வீதிக்கூடாக அனுப்பப்பட்டார்.

# சுட்டிலக்கங்கள் பெறவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெற இருக்கும் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான பரீட்சார்த்திகளின் சுட்டிலக்கங்கள் யாழ் கல்வித் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

இவற்றினை பாடசாலை அதிபர்கள் யாழ். கல்வித் திணைக்களத்தில்உடன்பெற்று பரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்கும்படி யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் இப்பரீட்சை யாழ். மாவட்டத்தில் சுமார் 93பரீட்சை நிலையங்களில் நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## தாண்டிக்குளம் பகுதியில்

# பயணிகளை நோக்கி படையினர் ஷெல் வீச்சு

(வவுனியா)

தாண்டிக்குளம் தடைமுகாமினூடாக வடபகுதி வந்த பொது மக்களை நோக்கி நேற்று சிறிலங்கா இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதலை நடாத்தியுள்ளனர். தாண்டிக்குளம் தடைமுகாம் பகுதியை பயணிகளை விரைவாக நடந்துசெல்ல வைக்கவே இவ்வாறு இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதலை நடாத்தியுள்ளனர்.

நண்பகல் 12. 25 மணிக்கும் 1. 05 மணிக்கும் 1. 15 மணிக்கும் தலா ஒவ்வொருஎறிகணைகளாக மூன்று எறிகணைகள் பயணிகளை நோக்கி வீசப்பட்டன. இதனால் பயணிகள் பெரும் பதற்றமடைந்து அவசர அவசரமாக வெளியேறினர்.

# உடன் பதவி விலகுமாறு அரசிடம் ஆறு எதிர்க் கட்சிகள் கோரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசு உடனடியாக இராஜினாமாச் செய்யவேண்டும் என ஆறு எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து கோரிக்கை விடுத்துள்ளன.

1953 ஆம் ஆண்டு நடைபெற்ற ஹர்த்தாலை நினைவு கூருமுகமாக நாளை மறுதினம் நுகேகொடையில் இவ் ஆறு எதிரணிகளும் இணைந்து ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நடாத்தவுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்ட பேரணியின் போதே தாம் இக் கோரிக்கையை விடுக்கவுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் காரியதரிசி திரு. தர்மசிறி சேனநாயகா பி. பி. ஸி. நிருபருக்கு தெரிவித்துள்ளார்.

நேற்றய தினம் சிறிலங்கா எதிர்க்கட்சிகளின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

( 4 ஆம் பக்கம் பார்க்க)

# எதிர்க்கட்சிகள் கூட்டத்தில் காமினி குழு பங்குபற்றாது

(கொழும்பு)

சிறிலங்கா எதிரணிகள் நடாத்த திட்டமிட்டுள்ள ஆர்ப்பாட்ட பேரணியில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி கலந்துகொள்ள மாட்டாது எனத் தெரியவருகிறது

சிறிலங்கா அரசின் நிவாரண வெட்டைக் கண்டித்து நாளைமறுதினம் நுகேகொடையில் சிறிலங்கா எதிரணிகள் இணைந்து நடாத்த திட்டமிட்டுள்ள ஆர்ப்பாட்ட பேரணியிலேயே காமினி திஸாநாயகா தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பங்குபற்றமாட்டாதென தெரியவந்துள்ளது

அண்மைக் காலத்தில் மேற்படி முன்னணி ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவது தொடர்பான பேச்சு

[ 4 ஆம் பக்கம் பார்க்க]

# எம்மை விடுவிப்பதற்கு அரசு அக்கறை கொள்ளவில்லை

## போர்க் கைதிகள் கவலை

யுத்தக் கைதிகளின் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் இன்றுடன் தொடர்ச்சியாக பதின்மூன்றாவது நாளாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தாம் தொடர்ந்தும் உண்ணா விரதப் போராட்டத்தை நடாத்திவருகின்றபோதிலும் அரசு தம்மை மீட்டெடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லையென்று கைதிகளது உறவினர்களும், கைதிகளும் கவலையும் மிகுந்த வேதனையுமடைந்துள்ளனர்.

தமது விடுதலை குறித்து தம்மால் எடுக்கக்கூடிய இறுதி முயற்சியே இந்த உண்ணாவிரதப் போராட்டம் என்றும் இப்போராட்டத்தை அரசு தொடர்ந்தும் அவமதித்து வருவதாகவும் இதனால் தாமும் தமது உறவினர்களும் மிகுந்த மன வேதனை அடைந்துள்ளதாகவும் நேற்று மாலை எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

# மூவர் கொழும்பிற்கு

(யாழ்ப்பாணம்)

உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள யுத்தக்கைதிகளின் மூன்று உறவினர்கள் இன்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் கொழும்பு செல்கின்றனர்.

நேற்று மாலை பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து கப்பல் மூலம் இவர்கள் காங்கேசன் துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் மீது தாக்குதல் ரொரன்ரோ மேயர் கவலை

கனடாவில் நடைபெறும் இனத்துவேஷ வன்முறைகளை ரொரன்ரோ மாநகர மேயர் ஜீன் லோரன்ஸ் கண்டித்துள்ளார். அண்மையில் ரொரன்ரோவில் நடைபெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றில் சிறுபான்மையினரை அவதூறு செய்யும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந் நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டு சென்ற வினாசித்தம்பி

( 4 ஆம் பக்கம் பார்க்க)

# எல்லைப்புறங்களில் இராணுவம் உஷார்நிலை

வடக்கு - கிழக்கு எல்லைப் புறக் கிராமங்களில் இராணுவத்தினர் உஷார் படுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் அவர் புத்தளம் பகுதியில் உள்ள எல்லைக் கிராமங்களுக்கு நேரில் விஜயம் செய்து நிலைமைகளை அவதானித்தார்.

இப்பகுதியில் இலவன்குளம் பொலிஸ் நிலையம் ஒன்று அண்மையில் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. பிரதமர் இப்பகுதி இராணுவ பொலிஸ் அதிகாரிகளையும சந்தித்துப் பேசினார், இப்பகுதியில்உள்ள படையினர் உஷார் படுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் இப் பகுதி மக்களுக்கு உறுதிமொழி வழங்கினார்.

# பல்கலை செலவினங்களுக்கு நிதி வழங்குதல் நிறுத்தம்

## திறைசேரி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகங்களது மேலதிக செலவினங்களை நிறுத்தி வைக்கும்படி சகல பல்கலைக் கழகங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கொழும்பு திறைசேரியில் இருந்து பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள் மூலம் இவ் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

திறைசேரியில் பணம்இல்லையென்ற காரணத்தைக் காட்டியே இவ்வாறு பல்கலைக் கழகங்களின் மேலதிக செலவினங்களை நிறுத்தும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. சகல பல்கலைக்கழகங்களுக்கும் தேவையான நிதியை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஒதுக்கீடு செய்துள்ள போதிலும் பல்கலைக் கழகங்களுக்கு வேண்டிய நிதியை திறைசேரி வழங்காமல் இருப்பதனால் பல்கலைக் கழகங்களின் செயற்பாடுகள் பல பாதிப்படையும் சூழ்நிலை தோன்றியுள்ளது.

பல்கலைக்கழக ஊழியர்களது சம்பளக் கொடுப்பனவுகளுக்கு மட்டுமே பணம் தர முடியும் என்றும் ஏனைய செலவினங்களை நிறுத்திக் கொள்ளும்படியும் திறைசேரியினால் பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் சுற்றுநிருபத்தில் கூறப்பட்டிருக்கிறது. இச்சுற்றுநிருபம் யாழ். பல்கலைக் கழகத்துக்கும் கிடைத்துள்ளது.

(க)

## வரி விளம்பரம்

### திருத்திக் கொள்ள, வாங்க, விற்க

பழுதடைந்த சசற் றேடியோக்கள், மேசை சுவர் கைக் கடிகாரங்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும், விற்கப்படும், நிபுணர்களால் பழுது பார்த்துக் கொடுக்கப்படும். டில்காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (வானவில் கூல்பார் அருகாமை) கிளை:- கண்டி வீதி, சாவகச்சேரி. (சி7168)

### சலனம்

சென்னைபிலிம்சொஸைட்டி வெளியிடும் உலக சினிமா தரம் பற்றிய இருமாத சினிமாஇதழ் கிடைக்குமிடம்: வசந்தம் புத்தக நிலையம், 405 அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (5592)

### தேவை

ஆயுர்வேத மருந்துகள் தயாரிப்பு வேலைகட்கு பெண் உதவியாளர் தேவை புதன், வெள்ளிக்கிழமைகளில் நேரில் தொடர்பு கொள்ளவும் மங்களபதி வைத்தியசாலை 415, அரசவீதி, நல்லூர். (5650)

### புலமைப்பரிசில் ஆண்டு (5)

வாரந்தோறும் வெளியிடப்படும் புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் 12-08-93 வியாழன் வெளியிடப்படும் விடையளித்து தந்தால் உடன் திருத்திக் கொடுக்கப்படும், எம்மால் வெளியிடப்பட்ட புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (5651)

### பாராட்டும் கௌரவிப்பும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் பருத்தித்துறை, புலோலி கொத்தணிகளில் உள்ள 10 பாடசாலைகளைச் சேர்ந்த 37மாணவ மாணவிகள் க.பொ.த.(சா.த) பரீட்சையிலும், க.பொ.த. உயர்தரப் பரீட்சையிலும் திறமையாகச் சித்தியடைந்தமையைப் பாராட்டி கௌரவித்து பரிசில்களும் வழங்கியுள்ளது இவ்விழா பருத்தித்துறை

---

பிரேமாவின் அனுசரணையோடு

## 85,000 பேரை வாக்காளர்களாக தொண்டா பதிவு செய்துள்ளார்

சு. க எம். பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் அனுசரணையுடன் அமைச்சர் தொண்டமான் ஊவா மாகாணத்தில் மட்டும 85,000 பேரை வாக்காளர்களாகப்பதிவு செய்து கொள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறு பதுளை மாவட்ட சுதந்திரக்கட்சிப்பாராளு மன்றஉறுப்பினரான எட்வின் விக்கிரமரத்னா தெரிவித்தார்.

தனமல்வில பிரதேசத்தில் நடைபெற்ற கட்சியின் பிரசாரக் கூட்டத்தில்உரை நிகழ்த்திய அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் இவ்வாறுவாக்காளர்களாகப்பதிவு செய்து கொண்டோர் ஒரு சத்தியக் கடதாசியின் மூலம் பிரஜா உரிமையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அமைச்சர் தொண்டமான் சொல்லுகின்றார். இதன் கருத்து என்னவென்றால் இன்று இந்திய நாட்டில் பிறக்கும் பிள்ளைகளுக்கும் கூட இலங்கையில் பிறப்பு சான்றிதழும். பிரஜா உரிமையும் பெறமுடியும் என்பதேயாகும் என்றும் தெரிவித்தார்.

## மனமாற்றம் இல்லையேல் சமாதானம் ஏற்படாது

-அமைச்சர் அஸ்வர்

(கொழும்பு)

சகல அரசியல்வாதிகள் மத்தியிலும் மனமாற்றம் ஏற்பட வேண்டும். அப்போது தான் நாட்டில்சமாதானத்தை நிலைநாட்டும் முயற்சிகள் பயனுள்ளதாக இருக்கும் இவ்வாறு முஸ்லிம் கலாசார அலுவல்கள் அமைச்சர் அஸ்வர் தெரிவித்தார்.

அகிலஇலங்கைமுஸ்லிம்கல்வி மாநாடு ஸாகிராக் கல்லூரியில் ஏற்பாடு செய்திருந்த ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்; இனப்பிரச்சினைக்குதீர்வு காண்பதில் பாராளுமன்ற தெரிவுக்குழு தோல்வியுற்றால் முழு நாடுமே தோல்வி கண்டு விடும் இன்றையநிலையில்நாடு தொடர்ந்து செல்லுமாயின் நாடு எங்கு போய் முடியுமோ என்று தெரியாத ஒரு நிலை ஏற்படும் என்றும் தெரிவித்தார்.

## ஆயுதமோ படை திரட்டுவதோ இனப்பிரச்சினையை தீர்க்காது

-எம். எஸ். செல்லச்சாமி

(கொழும்பு)

ஆயுதத்தினாலோ, 50,000 படையினரைத் திரட்டுவதனாலோ இனப் பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட முடியாது என்று கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்தார்.

அண்மையில் பாராளுமன்றத்தில் அவசரகால விதிகள் அமுலாக்கல் தொடர்பாக இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலுக் கூறுகையில்,

அரசியல் தீர்வுதான் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழி என்று சொல்லப்படுகிறது. அரசியல் தீர்வு என்றால் அரசியல் தீர்வொன்றைக் கண்டு பிடிப்பதற்கு என்ன தயக்கம்? எமது நாட்டிலேயுள்ள நாம் தான் இதற்கு அரசியல் தீர்வைக் கண்டுபிடிக்க முடியும்.

இன்று உலகம் முழுவதும் மிகப் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றது ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக தனி ஆட்சி நடத்திக் கொண்டிருந்த சோவியத் ரஷ்யா இன்று பல கூறுகளாகப் பிரிந்து விட்டது பொஸ்னியா போன்ற நாடுகளில் நடக்கும் சம்பவங்களைப் பார்த்து நாம் படிப்பினை பெறவேண்டும் என்றும் தெரிவித்தார்,

### தொண்டர்களுக்குசைக்கிள்

இலங்கை செஞ்சிலுவைசங்க யாழ் கிளையினரால் பிரிவுகள் தோறும் நான்கு சைக்கிள்கள் செஞ்சிலுவை தொண்டர்கள் பாவனைக்கென கட்டுப்பாட்டு விலையில்வழங்கியுள்ளது (11)

## யாழ். போக்குவரத்து நிலை அரசு கோரியுள்ளதாம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் உணவு, சுகாதாரம், போக்கு

செயலகம் பணித்திருப்பதாக தெரியவருகிறது. யாழ்ப்பாண

---

## புலிகள் பற்றிய அறிவீனமே தவறாக கதைக்க காரணம்

- ராய்ட்டர் நிருபர் பேச்சு

(கொழும்பு)

படையினரின் முகாம்கள் தாக்கப்பட்டால் எமது மக்கள் புலிகள் பற்றிக்கதைப்பார்கள். நாம் அவ்வாறு புலிகள் பற்றியே குறை கூறிக் கதைப்பதற்கு காரணம் நாம் புலிகள் பற்றி அறியாமல் இருப்பது தான் இவ்வாறு ராய்ட்டர் செய்தி நிறுவன நிருபர் லூசியன் கருணநாயக்க தெரிவித்தார்.

அண்மையில் பண்டாரவளை சந்தை மைதானத்தில் நடைபெற்ற சுதந்திர பொது ஜன தொடர்பு இயக்கத்தின் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், இன்றைய யுத்தத்தால் அரசு ஒரு யுத்த டாங்கிக்கு மட்டும் எவ்வளவு செலவிடுகின்றது. ஒரு தமிழரை கொலை செய்ய அரசாங்கம் எவ்வளவு செலவு செய்கின்றது. வட பகுதியில் போடப்படும் குண்டுகளால் மரணமடைவது புலிகளா? அப்பாவிப் பொதுமக்களா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்

இக்கூட்டத்தில் உரையாற்றிய ஹரய பத்திரிகையின் ஆசிரியர் சந்தனகீர்த்தி பண்டார தமது உரையில், ஹெரோயின் போதைப்பொருளுடன் வெளிநாட்டில் ஒரு தமிழர் கைது செய்யப்பட்டால், புலிப் படையைச் சேர்ந்த ஒருவர் கைது என்று பத்திரிகைகள் செய்தி வெளியிடுவதாகவும் ஆனால் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் இதே காரணத்துக்காக கைதாகினால் இலங்கையர் கைது என்று மட்டுமே செய்தி வெளியிடுவதாகவும் சுட்டிக் காட்டினார். இவ்வாறு வெளியிடுவது பத்திரிகை சுதந்திரம் ஆகாது எனவும் அவர் தெரிவித்தார்.

## அரசசார்பற்ற அமைப்புக்கே ஜேர்மன் அரசு உதவுகின்றது

- ஜேர்மன் தூதுவர்

(கொழும்பு)

ஜேர்மன் அரசாங்கம் இந்த நாட்டின்புனர்வாழ்வு தேவைகளுக்காக வழங்கும் பத்து மில்லியன் மார்க் பணத்தை சிறிலங்கா அரசாங்கத்திடம் கொடுக்காமல் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமே செலவிட்டு வருகின்றது இவ்வாறு ஜேர்மன் தூதுவர் பிரங்க் கூறியுள்ளார்.

கல்முனையில் அண்மையில் அரசாங்கப்பாடசாலைகளுக்கு தளபாடம் அன்பளிப்பாக வழங்கும் வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில் அரசாங்கப் பாடசாலைகளை கவனிக்கும் பொறுப்பு அரசாங்கத்தினுடையதே ஆகும் எனவும்குறிப்பிட்டார்.

அத்துடன் வடக்கு கிழக்கு நிலை பற்றி உலக நாடுகள் அறிந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்தப்பகுதிகளில் வாழ்ந்த பல மக்கள் அகதிகளாககப்பட்டுள்ளார்கள், பலர் அழிக்கப்பட்டு இருக்கின்றார்கள் எனவும் தெரிவித்தார்.

### பகிரங்க விசாரணை நடைபெறாது

அரசாங்க சார்பற்ற நிறுவனங்கள்பற்றிவிசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு எடுத்த முடிவின் படி சர்வோதய தலைவர் ஏ ரி ஆரியரத்னா மற்றும் சீட்ஸ் அமைப்பு என்பன பற்றி பகிரங்கமான விசாரணை நடைபெறமாட்டாது என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வோதய தலைவர் ஏ ரி. ஆரியரத்னா மற்றும் சீட்ஸ் அமைப்பு என்பன தொடர்பாக ஆறு விதமான பூர்வாங்க புகார்கள்குறித்து விளக்கங்கள் சத்தியப் பத்திரம் மூலம் இம்மாத இறுதிக்கு முன்பாக சமர்ப்பிக்கவிருப்பதையிட்டு இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எரிபொருள் நிலையத்தில் துப்பாக்கிமுனையில் கொள்ளை

அநுராதபுரத்தில் எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்றில் அண்மையில் ஓர் இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா பணம் துப்பாக்கிமுனையில் கொள்ளையிடப்பட்டுள்ளது.

ஆயுதபாணிகளாக எரிபொருள் விற்பனை நிலையத்திற்குச் சென்ற ஐந்து பேர் துப்பாக்கி முனையில் அங்கிருந்த விற்பனைப் பணத்தை முகாமையாளரிடமிருந்து அபகரித்துச் சென்றிருப்பதாகப் பொலிஸ் தலைமையகம் கூறியுள்ளது.

---

## விஷமிகளின் பொய்ப் பிரசாரத்தை மக்கள் நம்பிவிடக் கூடாது

- ஹரோல்ட் ஹேரத்

[கொழும்பு]

விஷமிகள் பரப்பிவரும் பொய்ப் பிரசாரங்களை நம்ப வேண்டாம் என்று அமைச்சரவைப்பேச்சாளரும், வெளிவிவகார அமைச்சருமான ஹரோல்ட்ஹேரத்வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிலாபம் டெலிகொம் நிலையத்தின் முன்பாக நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர், மேலும் கூறுகையில்;

ஜனாதிபதிபிரேமதாசாவின் மரணத்தின் பின்பாக அன்னாரது கொள்கைகள் மற்றும் வேலைத் திட்டங்களை எல்லாம் அரசு கைவிட்டு விட்டது என்றும், புதியபாதையில் அரசு போய்க் கொண்டிருக்கிறது என்றும் பரவலாக விமர்சிக்கப் படுகின்றது. ஆனால் இவை விஷமிகளின் சுயநலம் கலந்த பொய்ப் பிரசாரம் ஆகும். இதற்கு மக்கள் செவிசாய்க்கக் கூடாது என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

---

சிவமயம்

## 1-வது பிறந்தநாள் வாழ்த்து 10-08-93



### றொபின்ஸ்ராஜ் தர்மிகராஜ்

றொபின்ஸ்ராஜ் - மரியவனிதா தம்பதிகளின் செல்வப்புதல்வன் தர்மிகராஜ் தனது முதலாவது பிறந்த நாளை ஆனைக்கோட்டையில் உள்ள தனது இல்லத்தில் 10-08-93 இன்று செவ்வாய்க்கிழமை மிகக் குதூகலமாகக்கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, ஆசையப்பா, துள்ளப்பா, அம்மப்பா, அம்மம்மா, மற்றும் பெரியப்பாமார், சித்தப்பா. மாமிமார், மாமாமார், உற்றார் உறவினர்கள் முருகன் அருளால் பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழவாழ்த்துகிறார்கள்.

(5645)

## நினைவு கூருகின்றோம்...

1993-08-10

மால் வெளியிடப்பட்ட புலமைப் பரிசில் மாதிரி வினாத் தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (5651)

## பாராட்டும் கௌரவிப்பும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் பருத்தித்துறை, புலோலி கொத்தணிகளில் உள்ள 10 பாடசாலைகளைச் சேர்ந்த 37மாணவ மாணவிகள் க.பொ.த.(சா.த) பரீட்சையிலும், க.பொ.த. உயர்தரப் பரீட்சையிலும் திறமையாகச் சித்தியடைந்தமையைப் பாராட்டி கௌரவித்து பரிசில்களும் வழங்கியுள்ளது இவ்விழா பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத் தலைவர் திரு இ. இராசநாதன் தலைமையில் நடைபெற்றது பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு சி. பொ. பாலசிங்கம் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். வடமராட்சி பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு ச செல்வத்துரை பாராட்டிக் கௌரவிக்கப்பட்ட 37மாணவ மாணவிகளுக்கான பரிசில்களை வழங்கினார். ''கல்வியில் மாணவர்களின் இன்றைய நிலை'' பற்றி யாழ் பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளர் திரு த கலாமணி உரையாற்றினார். ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு வி. சே ஏகாம்பரநாதன் சிறப்புரையாற்றினார். ஆசிரியர் திரு சி நந்தகுமார் நன்றியுரை வழங்கினார். [25]

## ஏழு மாதமாக உதவிப் பணமில்லை

(யாழ்ப்பாணம்)

வேலணை மற்றும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த பொதுசன மாதாந்த உதவித் தொகை பெறுவோருக்கு கடந்த ஏழு மாதங்களுக்கான உதவித்தொகை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

ஏனைய பிரிவிலுள்ளோருக்கு இந்த உதவித்தொகை ஒழுங்காக மாதா மாதம் வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் தை மாதத்தின் பின்னர் வேலணை, ஊர்காவற்றுறை பிரிவுகளைச்சேர்ந்தவர்களுக்கு இது வழங்கப்படவில்லை

இதேசமயம் இப்பிரிவுகளில் மேற்படி உதவித் தொகையைப் பெற்று வந்தவர்களின் ஒரு பகுதியினருக்கு இந்த உதவித் தொகை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (தி), (வா)

ஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்தார்.

அண்மையில் பாராளுமன்றத்தில் அவசரகால விதிகள் அமுலாக்கல் தொடர்பாக இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்,

அரசியல் தீர்வுதான் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழி என்று சொல்லப்படுகிறது. அரசியல் தீவு என்றால் அரசியல் தீர்வொன்றைக் கண்டுபிடிப்பதற்கு என்ன தயக்கம்? எமது நாடடிவேயுள்ள நாம் தான் இதற்கு அரசியல் தீர்

மேலாக தனி ஆட்சி நடத்திக் கொண்டிருந்த சோவியத் ரஷ்யா இன்று பல கூறுகளாகப் பிரிந்துவிட்டது பொஸ்னியா போன்ற நாடுகளில் நடக்கும் சம்பவங்களைப் பார்த்து நாம் படிப்பினை பெறவேண்டும் என்றும் தெரிவித்தார்,

## தொண்டர்களுக்கு சைக்கிள்

இலங்கை செஞ்சிலுவைசங்க யாழ் கிளையினரால் பிரிவுகள் தோறும் நான்கு சைக்கிள்கள் செஞ்சிலுவை தொண்டர்கள் பாவனைக்கென கட்டுப்பாட்டு விலையில்வழங்கியுள்ளது (11)

ந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில் அரசாங்கப் பாடசாலைகளை கவனிக்கும் பொறுப்பு அரசாங்கத்தினுடையதே ஆகும் எனவும்குறிப்பிட்டார்.

அத்துடன் வடக்கு கிழக்கு நிலை பற்றி உலக நாடுகள் அறிந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்தப்பகுதிகளில்

கப்பட்டுள்ளது.

சர்வோதய தலைவர் ஏ ரி. ஆரியரத்னா மற்றும் சீட்ஸ் அமைப்பு என்பன தொடர்பாக ஆறு விதமான பூர்வாங்க புகார்கள்குறித்து விளக்கங்கள் சத்தியப் பத்திரம் மூலம் இம்மாத இறுதிக்கு முன்பாக சமர்ப்பிக்கவிருப்பதையிட்டு இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். போக்குவரத்து நிலை அரசு கோரியுள்ளதாம்

யாழ்ப்பாண மாவட்டத்தின் உணவு. சுகாதாரம், போக்குவரத்து நிலைமைகள் மற்றும் அகதிகள் நிலை ஆகியன சம்பந்தமாக விபரமான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும்படி யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரை ஜனாதிபதி செயலகம் பணித்திருப்பதாக தெரியவருகிறது. யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப் படவேண்டிய அவசர நடவடிக்கைகள் மற்றும் தேவைகள் பற்றியும் குறிப்பிடப்படவேண்டும்எனவும்ஜனாதிபதி செயலகம் மேலும் கோரியுள்ளதாம்

# எரிபொருள் நிலயத்தில் துப்பாக்கிமுனையில் கொள்ளை

அநுராதபுரத்தில் எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்றில் அண்மையில் ஓர் இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா பணம் துப்பாக்கிமுனையில் கொள்ளையிடப்பட்டுள்ளது.

ஆயுதபாணிகளாக எரிபொருள் விற்பனை நிலையத்திற்குச் சென்ற ஐந்து பேர் துப்பாக்கி முனையில் அங்கிருந்த விற்பனைப் பணத்தை முகாமையாளரிடமிருந்து அபகரித்துச் சென்றிருப்பதாகப் பொலிஸ் தலைமையகம் கூறியுள்ளது.

## றொபின்ஸ்ராஜ் தர்மிகராஜ்

றொபின்ஸ்ராஜ் - மரியவனிதா தம்பதிகளின் செல்வப்புதல்வன் தர்மிகராஜ் தனது முதலாவது பிறந்த நாளை ஆனைக்கோட்டையில் உள்ள தனது இல்லத்தில் 10-08-93 இன்று செவ்வாய்க்கிழமை மிகக் குதூகலமாகக்கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, ஆசையப்பா, துள்ளப்பா, அம்மப்பா, அம்மம்மா, மற்றும் பெரியப்பாமார், சித்தப்பா, மாமிமார், மாமாமார், உற்றார் உறவினர்கள் முருகன் அருளால் பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழவாழ்த்துகிறார்கள்.

(5645)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் வலவை: | | மறைவு கனடா: |
|---|---|---|
| 27 |  | 23 |
| — | | — |
| 11 | | 07 |
| — | | — |
| 1930 | | 1992 |

திருமதி

### மகமாசி சிவகணேசன்

(திதி: 11-08-93 நவமி)

எங்களை விட்டுப் பிரிந்து வருடம் ஒன்றாகியும் உங்கள் பசுமையான தோற்றமும் என்றும் நெஞ்சை விட்டகலாது.

மகேஸ்வரியும் சகோதரர்களும், மைத்துனர்: கதிர்காமத்தம்பியும் மற்றும் குடும்பத்தினரும்.
பிள்ளைகள்: (கனடா) பவானிபுவனச்சந்திரன். பிரேமச்சந்திரன். ரஞ்சினி திகமொளிபவன், பாலச்சந்திரன் சிவாஜினி யோகச்சந்திரன் நளினா, நளாயினி துரைரத்தினம், செல்வச்சந்திரன் நந்கா (டென்மார்க்), பெறாமகள் க அருமைச்செல்வம், சித்திரலேகா (திருச்சி).

திருவில், வலவை, 10-08 93.

(5640)

யாழ்ப்பாணம் உள்ளூராட்சித் திணைக்களத்துடன் யாழ் மாவட்ட சித்த வைத்தியக் கூட்டுறவுச் சங்கம் இணைந்து நடாத்தும் ''சித்தமருத்துவத்தை மக்கள் மயப்படுத்தல்'' சம்பந்தமான

## கருத்தரங்கு

மேற்படி கருத்தரங்கு ஆவணி மாதம் 29-ம், 30-ம் திகதிகளில் யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புபவர்கள் 20-8-1993 -ம் திகதிக்கு முன்னர் யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்திற்குத் தங்கள் பெயர், முகவரி போன்ற விபரங்களை அறியத்தரும் வண்ணம் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

உள்ளூராட்சித் திணைக்களம் (எஸ். டிவகலாலா)
யாழ்ப்பாணம். பிரா.உ.உ. ஆணையாளர்,
02-08-1993. [சி/7120] யாழ்ப்பாணம்.

## பதவி வெற்றிடம்

ஆங்கில மருந்து வாணிபத்தில் அனுபவம் உடையவர்களிடமிருந்து விற்பனையாளர்கள், விற்பனைப் பிரதிநிதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:-

க. பொ. த. (சா/த)வில் சித்தியும் ஆகக் குறைந்தது இப்பதவிகளில் ஏதாவதொன்றில் மூன்று வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கத் தகுதியுடையோர் 10-08-93 காலை 9-00 மணிக்கு யாழ்ப்பாணம் (கந்தர் மடத்தில்) பலாலி வீதியில் அமைந்துள்ள வருவாய்ப் பகுதிச் செயலகத்திற்கு உரிய சான்றிதழ்களுடன் நேரில் வருகை தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

—சேரன் பல்பொருள் அங்காடி,
(சி-7165) அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

## நினைவு கூருகின்றோம்...

## 1993-08-10

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் திருமலை - திரியாய் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ **ராஜா** [மாணிக்கம் நடராஜா- உலந்தவா - அக்குரச]

1987ஆம் ஆண்டு திருமலையில் தேசவிரோதசக்திகளினால் அடித்துக் கொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளர் -

**செல்வம்** [காளிதாசன் செல்வகுமார் - திருமலை]

1989ஆம் ஆண்டு யாழ் - கோண்டாவிலில் தேசவிரோத சக்திகளினால் பிடித்துச் செல்லப்பட்டு பின்னர் சடலமாக மீட்கப்பட்ட தமிழிளைஞன்.

1990ஆம் ஆண்டு மட்டு மாவட்டத்தில் சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த -

**ஈஸ்வரகுமார்** [ — யோகநாதன் - பழுகாமம் - மட்டு]

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**சுரேஸ்** [சோமசுந்தரம் பரமேஸ்வரன் - முட்டுச்சேனை, மூதூர் - திருமலை]

மட்டு - வாழைச்சேனைப் பகுதியில் இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு ரயர் போட்டு எரித்து கொல்லப்பட்ட புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தமிழிளைஞன்.

திருமலை - பச்சனூர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் உட்பட 11 தமிழர்கள்.

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 16 தமிழிளைஞர்கள்.

1992ஆம் ஆண்டு நாவற்குழி இறால் பதனிடும் தொழிற்சாலையை அண்டிய பகுதியில் சிறிலங்கா விமானப்படையினரின் விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட கர்ப்பிணிப் பெண்.

மட்டு - வாழைச்சேனை அகதிமுகாமில் வைத்துக் கைது செய்யப்பட்டு பின்னர் ரயர் போட்டு எரித்துக் கொல்லப்பட்ட புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தமிழிளைஞன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-7167)

### சிந்தனைக்கு

மனிதர்கள் அடையும் விவேகம்,
அவர்கள் அனுபவத்தைப் பொறுத்தல்ல;
அனுபவம் அடைய அவர்களுக்குள்ள
ஆற்றலைப் பொறுத்ததே யாகும்.

— ஜார்ஜ் பெர்னாட் ஷா

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 10-08-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05

## மூளைச்சலவையும் பேரினவாதமும்

“நாட்டில் யுத்தம் நடந்து கொண்டிருக்கையில் மக்கள் எவ்வாறு கிரிக்கெட் ஆட்டங்களைப் பார்த்துக் கைதட்டலாம்.... தேசிய அழிவுநடந்து கொண்டிருக்கையில் மக்களைக் கேளிக்கைகளில் ஈடுபாடு கொள்ளச் செய்வதன் மூலம் மூளைச் சலவை செய்வது நாட்டிற்கே பெரும் சாபம்” இவ்வாறாக கண்டி மாநகர சபைக்கூட்டத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் கே ஏ. வில்பேட் பேசுகையில் அரசாங்கம் மீது குற்றம் சாட்டினார்.

எதிர்க்கட்சி உறுப்பினரின் இவ்ஆவேசம் கிரிக்கெட் மீது அல்ல. மண்கிண்டிமலை இராணுவ முகாமைத் தாக்கி விடுதலைப் புலிகள் பெருந்தொகையான ஆயுதங்களை எடுத்துச் சென்றதினால் ஏற்பட்ட கொதிநிலை ஆகும். அதாவது, “கிரிக்கெட்டும் நாட்டுக்குத் தேவை தான். இது அந்தக் கேளிக்கைக்குரிய நேரமல்ல” என்பதே அவரது கருத்தாகும்.

ஆனால் எதிர்க்கட்சி உறுப்பினர் குறிப்பிடுவது போல் சிங்களவர் யுத்தத்தில் இருந்து திசைதிருப்பப்பட வல்லை. நாட்டின் பொருளாதார நெருக்கடி, வேலையில்லாப் பிரச்சினை போன்ற விடயங்களில் இருந்தே சிங்கள இளைஞர்கள் திசைதிருப்பப்பட்டுள்ளார்கள்.

ஏனெனில், சிங்கள அரசியல் வாதிகளும் சரி, பௌத்த பிக்குகளும் சரி, புத்திஜீவிகளும் சரி யுத்தத்தைப் பற்றியே நீண்ட காலமாகப் பேசுகின்றனர். எவ்வாறாகிலும் யுத்தத்தில் வென்று விட வேண்டும் என்பதனை அவர்கள் வலியுறுத்தாத இடங்களே இல்லை. பாராளுமன்றத்தில் இருந்து விகாரைகள் வரையிலும் தமிழருக்கு எதிரான போரைப் பற்றியே பேசுகின்றனர். சமாதானம் பற்றிப் பேசினால் சுட்டுக் கொல்லப்பட வேண்டும் எனக் கூறும் அளவிற்கு போர்வெறி பௌத்தப் பேரினவாதிகளிடம் காணப்படுகின்றது.

இதனைச் சிங்கள இளைஞர்களும் ஏற்காமல் இல்லை. 1990இல் இரண்டாம்கட்ட ஈழப் போர் ஆரம்பமானபோது இராணுவத்தில் சேருவதற்காகக் காத்துக் கிடந்தவர்களதான் சிங்கள இளைஞர்கள். இராணுவத்தில் சேர்ந்து புலிகளுக்கு எதி

## 15 வருட ஐ.தே.க. ஆட்சி அப்பாவி மக்கள் துன்பம்

(கொழும்பு)

அப்பாவி மக்கள் கடந்த 15 வருட காலமாக கொலைகார ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் துன்புற்றுக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் ஐ.தே.க.வின் கொலைகார கும்பல்கள் இன்னும் அழியவில்லை.

இவ்வாறு மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க நெல்லிகாமுல சந்தியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது தெரிவித்தார் அவர் அங்குமேலும்கூறுகையில் நாட்டில் இனி அநியாயங்கள் நடக்காது எனஎவரும் எண்ணிவிடக்கூடாது அதனால் ஐ.தே கட்சி எதிர்ப்புப் போராட்டத்தை மக்கள் கொண்டு நடத்தவேண்டும்.

நான் மேல் மாகாணசபை முதலமைச்சர் ஆவதற்கு மக்கள் பெருமளவு பலத்தை எனக்கு அளித்திருந்தாலும் அரசு எனக்கு கட்டுப்படுத்தப்பட்ட அதிகாரத்தையும்வரையறுக்கப்பட்ட நிதியையுமே அளித்துள்ளது வேலை வாய்ப்பு அபிவிருத்தி வேலைகள் ஆகிய திட்டங்களை அமைத்துவிட்டு மக்கள் பிரச்சினைகளை தீர்க்க முனைவேன் என்றார்.

## இராணுவச் சிப்பாய் நீரில் மூழ்கி மரணம்

படகு விபத்தில் சிக்கி மூதூரில் இராணுவச் சிப்பாய் ஒருவர் பலியாகியுள்ளார் மூதூர் பகுதியின் தோப்பூர் ஜின்னா நகர் இராணுவ முகாமில் கடமையாற்றிவரும்இரண்டாவது கஜபாகு படைப்பிரிவைச் சேர்ந்த இராணுவ அணியொன்று ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பின்னர் முகாமிற்கு திரும்பிக் கொண்டிருந்த போது படகு கவிழ்ந்ததால் ஈ.பி.ஆர். பீ. பத்திராண என்னும் இராணுவச்சிப்பாய் மரணமானார்.

## சுங்கப்பகுதியில் பெருமளவு பொருள்கள் தேக்கம்

(கொழும்பு)

சுங்க இலாகாவில் நூற்றி நாற்பது இலட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியுடைய பொருள்கள் சுங்கத் திணைக்களத்தில் தேங்கிக் கிடப்பதாக கூறப்படுகின்றது.

நவீன வோல்வோ ரகஆடம்பர மோட்டார் வாகனம் ஒன்றும், பென்ஸ் ரகமோட்டார் வாகனம் ஒன்றும் சகல உதிரிப் பாகங்களும் உட்பட பல ஆடம்பரப் பொருள்களும் இப் பொருள்களில் அடங்கும் என்றும் மேலும் கூறப்படுகின்றது. அரசாங்க வட்டாரங்களுடன் நெருங்கிய தொடர்புடைய செல்வந்த வர்த்தகர் ஒருவரால் இந்த வாகனங்களும், உதிரிப் பொருள்களும் கொண்டுவரப்பட்ட விதம் பற்றியும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த மோட்டார் வாகனங்களினதும், உதிரிப் பாகங்களினதும் பெறுமதி இவற்றைக் கொண்டு வந்தவர்களால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாம்.

### காதில்லா குழந்தை

கொட்டைக்காடு அரசினர் வைத்தியசாலையில் இரு காதுகளும் இல்லாமல் குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

அராலிமேற்கு கொட்டைக்காடு வைரவர் கோவிலடி முகாமில் வசித்துவரும் தாய் ஒருவரே மேற்படி இரு காதுகளும் இல்லாத ஆண் குழந்தை ஒன்றை பிரசவித்துள்ளார். குழந்தையும் தாயும் தற்போது அம் முகாமில் வசித்து வருகிறார்கள்.

## உலகவங்கிநினைத்தால்தான் யுத்தப் பிரச்சினை தீரும்

### ‘மக்களின் நண்பர்கள்’ பிரமுகர் தெரிவிப்பு

[கொழும்பு]

உலகவங்கி நினைத்தால் தான் நாட்டில் இன்றுள்ள யுத்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியும். ஆனால் உலகவங்கி அவ்வாறு செய்யாது. ஏனெனில் அதற்குத் தேவை வியாபாரம். ஆகவே நாட்டில் என்று சுயமான - சுதந்திரமான ஆட்சி நடக்கின்றதோ அன்றுதான் நமது பிரச்சினைகளை நாம் தீர்க்க முடியும். அதுவரையில் நாட்டின் இன்றைய பிரச்சினைகளை இன்றைய அரசால் தீர்த்து வைக்க முடியாது.

இவ்வாறு மக்களின் நண்பர்கள் என்னும் புதிய அமைப்பின் முக்கிய உறுப்பினர் அத்துரலியே ரத்தின தேரோ தெரிவித்தார்.

கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மேற்படி அமைப்பின் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில்,

வெள்ளையர் ஆட்சியின் போதுகூட நடவாத அராஜகக் கொடுமைகள் இப்போது நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் மக்கள் எதிர்க்குரல் எழுப்ப முன்வராதமையின் காரணமாகவே நாம் எமது இயக்கத்தை ஆரம்பித்தோம்.

ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் இன்று அமெரிக்கக் கம்பனிகளுக்குக் கையளிக்கப்பட்டுள்ளன. நாட்டின் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு கம்பனிகள் உருவாக்கப்படுகின்றன. மூலப் பொருள்கள் கிடைக்காதபோது கம்பனிகள் மூடப்படும். அப்போது இயற்கை வளமும் இராது, வருமானமும் இராது. அப்போது புதிதாக ஒரு சோமாலியா நமது நாட்டில் உருவாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சம்பிக்க ரணவக்க, ஜாகை பண்டார போன்றோரும் உரையாற்றினர்.

### உதைபந்தாட்டம்

[வடமராட்சி]

அமரர் வை. சிவகுருநாதன் அவர்களின் ஞாபகார்த்த 7 பேர்கொண்ட உதைபந்தாட்ட இறுதிச்சுற்றுப்போட்டி இன்று பிற்பகல் 4.00 மணிக்கு வல்வெட்டித்துறை ‘‘யங்கம்பன்ஸ்’’ விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும். இதன்போது கம்பர்மலை யங்கமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தொண்டமனாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம் மோதும். (யோ)

## மாகாணசபைக் கூட்டங்களுக்கு சந்திரசேகரன் வர வேண்டும்

### எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(கொழும்பு)

பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள ஓர் உறுப்பினரை நாம் எப்படியாவது இச் சபைக்கு கொண்டு வர வேண்டும் என்று மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் விஜய விக்கிரம ரட்ண மாகாணசபைக் கூட்டத்தில் உரை நிகழ்த்தும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், அவரைப் பிணையில் விடுதலை செய்யும் முயற்சிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. எனினும் அவரை வேறு எந்த வழியிலாயினும் கூட சபைக்கு கொண்டு வர முயற்சி செய்ய வேண்டும். அவரது கொள்கைகளைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் அவர் இச்சபையில் எதிர்க்கட்சி உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ள ஒருவர் எனவே அவர் இச்சபைக்கு வரவேண்டுமென நான் விரும்புகின்றேன் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக பதிலளித்த சபைத் தலைவர் சரத் கோங்காகே இது பற்றி பாதுகாப்பு அமைச்சுக்கு தெரியப்படுத்தியுள்ளோம். நீதிமன்றத்திற்கு மட்டுமே இது தொடர்பான முடிவுகளை மேற்கொள்ள முடியும். ஜயலத் ஆணைக்குழுவிடமும் நாம் இது பற்றித் தெரிவித்துள்ளோம் என்றும் தெரிவித்தார்

## குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு அரசியல் கட்சிகள் கண்டனம்

(சென்னை)

சென்னையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக பல்வேறு தலைவர்களும் அதிர்ச்சியும்கண்டனமும் தெரிவித்துள்ளனர்.

சென்னையில் நடைபெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தை தனிப்பட்ட ஒன்றாகக் கருதக் கூடாது என்றாலும், ஏராளமான ஆயுதங்களும், வெடி மருந்துகளும் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதன் பின்னணியில் இது பார்க்கப்பட வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் எல். கே. அத்வானி கூறியுள்ளார்.

துயரமான இச் சம்பவத்தை நாட்டு மக்கள் துணிவுடன் சந்திப்பார்கள்என்று சமாஜவாதி ஜனதா கட்சியின் தலைவரும் முன்னாள்பிரதமருமான எஸ். சந்திரசேகர் கூறியுள்ளார்.

## அமைதியை தொடர்ந்தும் ...

## குண்டுவெடிப்புசம்பவத்திற்கு பிரதமர் ராவ் கண்டனம்

(சென்னை)

சென்னையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக பிரதமர் பி. வி. நரசிம்ம ராவ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் அவர் வெளியிட்ட அறிக்கையொன்றில் மேலும் இச்சம்பவத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## பொஸ்னியாவின் தலைநகர் பாதுகாக்கப்பட வேண்டும்

### நேட்டோ தீர்மானம்

(பிரேசல்ஸ்)

போல் சிங்களவர் யுத்தத்தில் இருந்து திசைதிருப்பப்பட வில்லை. நாட்டின் பொருளாதார நெருக்கடி, வேலையில்லாப் பிரச்சினை போன்ற விடயங்களில் இருந்தே சிங்கள இளைஞர்கள் திசைதிருப்பப்பட்டுள்ளார்கள்.

ஏனெனில், சிங்கள அரசியல் வாதிகளும் சரி, பௌத்த பிக்குகளும் சரி, புத்திஜீவிகளும் சரி யுத்தத்தைப் பற்றியே நீண்ட காலமாகப் பேசுகின்றனர். எவ்வாறாகிலும் யுத்தத்தில் வென்று விட வேண்டும் என்பதனை அவர்கள் வலியுறுத்தாத இடங்களே இல்லை. பாராளுமன்றத்தில் இருந்து விகாரைகள் வரையிலும் தமிழருக்கு எதிரான போரைப் பற்றியே பேசுகின்றனர். சமாதானம் பற்றிப் பேசினால் சுட்டுக் கொல்லப்பட வேண்டும் எனக் கூறும் அளவிற்கு போர்வெறி பௌத்தப் பேரினவாதிகளிடம் காணப்படுகின்றது.

இதனைச் சிங்கள இளைஞர்களும் ஏற்காமல் இல்லை. 1990இல் இரண்டாம்கட்ட ஈழப் போர் ஆரம்பமானபோது இராணுவத்தில் சேருவதற்காகக் காத்துக் கிடந்தவர்களதான் சிங்கள இளைஞர்கள். இராணுவத்தில் சேர்ந்து புலிகளுக்கு எதிராகப் போரிடப் போவதாக வானொலிக்கும், தொலைக்காட்சிக்கும் பேட்டி அளித்தவர்கள்.

ஆனால், இன்று அவ்வாறான தொரு நிலை இல்லை. படையில் ஆட்களைச் சேர்ப்பதற்கான விளம்பரங்கள் போடப்பட்டும் படைகளில் ஆட்கள் சேர முன்வருவதாக இல்லை. இருப்பவர்களும் இராணுவத்தைவிட்டு விலகுவதையே விரும்புகின்றனர். ஆனால், இந்நிலைக்கு களியாட்டங்களோ, கண்காட்சிகளோ காரணமல்ல அவர்கள் சந்தித்த யுத்தமே காரணமாகும்.

அதாவது, யுத்தம் அவர்களைப் புறந்தள்ளி விட்டது. யுத்தம் அவர்கள் எண்ணியது போலவோ அரசாங்கம் பிரசாரம் செய்வதுபோலவோ இல்லை என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள். யுத்தத்தில் வெற்றி என்பதை விட மரணமே நிச்சயம் என்பது அவர்கள் அனுபவத்தின் ஊடாகப் பெற்ற பாடமாகும். இந்நிலையிலேயே அவர்கள் யுத்தத்தில் இருந்து திசைதிரும்பியுள்ளார்கள்.

சிங்கள இளைஞர்கள் யுத்தம் குறித்து மூளைச் சலவை எதற்கும் உட்பட்டதாகக் கூறுவது தவறாகும். ஆனால் யுத்தத்தின் விளைவாக நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் பாதகமான நிலைகளை மறைக்கும் பொருட்டே அவர்கள் சிந்தனைகள் திசைதிருப்பப்படுகின்றன. இதற்காக களியாட்டங்களுக்கும், கலாசார சீர்கேடுகளுக்கும் வழிவகுக்கும் நடவடிக்கைகளுக்கும் அரசாங்கம் ஊக்கம் அளிக்கின்றது. அத்தோடு, யுத்தத்தின் சுமையைத் தாங்கிக் கொள்வதற்காக இனவாதப் போதனையும் அளிக்கப்படுகின்றது.

இந்நிலையில், சிங்கள இளைஞர்களுக்குத் தேவைப்படுவது யுத்தத்தைப் பற்றிய தெளிவல்ல, பேரினவாத சிந்தனையால் விளைந்துள்ள கெடுதல் பற்றிய தெளிவே, சிறிலங்காவின் பொருளாதாரத்தைப் பற்றிய விளக்கமே. இவை குறித்து செய்யப்பட்டுள்ள மூளைச்சலவையே கழுவப்பட வேண்டியதாகும். இது கழுவப்படுமானால், அரசியல்வாதிகள் தமது அதிகாரங்களை தொடர்ந்தும் பாதுகாத்துக் கொள்வதற்காக மேற்கொண்டுவரும் யுத்தமும் அதனால் ஏற்படும் பொருளாதாரச் சுமையையும், விலைவாசி ஏற்றத்தையும் புரிந்து கொள்ள முடியும். இதன்மூலம் அதனைத் தடுத்து நிறுத்தவும் முற்படலாம்.

---

செல்வந்த வர்த்தகர் ஒருவரால் இந்த வாகனங்களும், உதிரிப் பொருள்களும் கொண்டுவரப்பட்ட விதம் பற்றியும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ளும் இல்லாத ஆண் குழந்தை ஒன்றை பிரசவித்துள்ளார். குழந்தையும் தாயும் தற்போது அம் முகாமில் வசித்து வருகிறார்கள்.

மாகாணசபைக் கூட்டத்தில் உரை நிகழ்த்தும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், அவரைப் பிணையில்

எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் அவர் இச்சபையில் எதிர்க்கட்சி உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ள ஒருவர் எனவே அவர் இச்சபைக்கு வரவேண்டுமென நான் விரும்

ற்கு மட்டுமே இது தொடர்பான முடிவுகளை மேற்கொள்ள முடியும். ஜயலத் ஆணைக்குழு விடமும் நாம் இது பற்றித் தெரிவித்துள்ளோம் என்றும் தெரிவித்தார்

---

# குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு அரசியல் கட்சிகள் கண்டனம்

(சென்னை)

சென்னையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக பல்வேறு தலைவர்களும் அதிர்ச்சியும்கண்டனமும் தெரிவித்துள்ளனர்.

சென்னையில் நடைபெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தை தனிப்பட்ட ஒன்றாகக் கருதக் கூடாது என்றாலும், ஏராளமான ஆயுதங்களும், வெடி மருந்துகளும் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதன் பின்னணியில் இது பார்க்கப் பட வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் எல். கே. அத்வானி கூறியுள்ளார்.

துயரமான இச் சம்பவத்தை நாட்டு மக்கள் துணிவுடன் சந்திப்பார்கள்என்று சமாஜவாதி ஜனதா கட்சியின் தலைவரும் முன்னாள்பிரதமருமான எஸ். சந்திரசேகர் கூறியுள்ளார்.

குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் உடன் மேற்கொள்ளப் பட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் இந்திரஜித் குப்தா தெரிவித்தார்.

இத்தகைய வன்முறைகளை தமது கட்சி ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என்பதுடன் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க தமிழக அரசு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று தி.மு.க தலைவர் மு. கருணாநிதி தஞ்சாவூரில் வெளியிட்ட ஓர் அறிக்கையில் கூறியுள்ளார்.

தமிழ் நாட்டில் வெடிகுண்டு கலாசாரம் பரவியிருப்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது என்றும், நாட்டில் நடைபெற்ற இது போன்ற குண்டுவெடிப்பு சம்பவங்களின் பின்னணியில் தமிழக காவற்துறை நடவடிக்கை எடுக்க தவறிவிட்டது என்று தமிழககாங்கிரஸ் தலைவர் வாழப்பாடிஇராமமூர்த்தி கூறியுள்ளார்.

இது போல பல்வேறு கட்சிகளும் சமய சமூக நிறுவனங்களும் இச்சம்பவத்தைக்கண்டித்துள்ளன.

## அமைதியை தொடர்ந்தும் காப்பாற்ற வேண்டும்

### ஜெயலலிதா கோரிக்கை

குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் துறையினரின் விசாரணைக்கு உத்தரவிட்டிருப்பதாக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் திண்டுக்கல்லில் அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில், மேலும் குற்றவாளிகள் விரைவில் கண்டு பிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என்றும், அமைதிக்கு பெயரெடுத்த தமிழ்நாட்டு மக்கள் இந்தச் சம்பவத்தை தொடர்ந்தும் அமைதியையே காப்பார்கள் என்று நம்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கும் செல்வி ஜெயலலிதா ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துள்ளார்.

## பெரியதொரு சதியின் ஓர் அங்கமே குண்டுவெடிப்பு

### – ஆளுநர் சென்னாரெட்டி

(சென்னை)

சென்னையில் நேற்று முன்தினம் குண்டுவெடிப்பு சம்பவம் நேரிட்ட இடத்தைமாநில ஆளுநர் டாக்டர் எம். சென்னாரெட்டி நேரில் சென்று பார்வையிட்டார். காவல்துறை உயர் அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்திய அவர் இச் சம்பவம் ஒரு பெரும் சதித்திட்டத்தின் ஒரு பகுதி போலத் தோற்றுவதாக செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

அத்துடன் அமைதியான சென்னை நகரில் இத்தகைய சம்பவம் நேரிட்டிருப்பது குறித்து தான் மிகுந்த அதிர்ச்சி அடைவதாகவும், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு நிலையை பாதுகாக்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்று நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

பின்னர் மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்று வருவோரையும் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறினார்.

## மத விவகாரத்தில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது

### பி. வி. நரசிம்மராவ்

(டில்லி)

சமயத் தலைவர்கள் அரசியலில் தலையிடாது ஒதுங்கியிருப்பதைப் போலவே அரசியல் வாதிகளும் மத விடயங்களில் தலையிடாது ஒதுங்கிக் கொள்ள வேண்டும் என்று இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்தார்.

புதுடில்லியில் பள்ளிவாசல்களின்இமாம்களுக்கு மாதாந்த ஊதியம் வழங்குவது தொடர்பாக நடந்த கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், இதனை உறுதி செய்வதற்காகவே அரசியலில் இருந்து மதத்தைப் பிரிப்பதற்கான சட்ட மூலம் கொண்டு வரப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்தார்.

மத்திய அரசு மத விவகாரங்களில் தலையிடாதிருக்கும் அதே சமயம் மத நிறுவனங்கள் அரசியல் சார்பற்ற சக்திகளால் நிர்வகிக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

## அமெரிக்காவில் பெரும் புயல்

[வாஷிங்டன்]

அமெரிக்காவின் பீட்டர்ஸ் பேர்க் மாகாணத்தில் பல இடங்களில் சூறாவளி வீசியதால் பலத்த சேதம்ஏற்பட்டுள்ளது. பல கட்டடங்களும் இடிந்து நொருங்கிப் போயிருப்பதால் இடிபாடுகளுக்குள் பலர் சிக்கியிருக்கலாம் என கூறப்படுகின்றது. உயிரிழப்பு பற்றி உடனடியாக எதுவும் தெரியவில்லை. சனிக்கிழமை இரவு பதினொரு மணிக்குப் பின் வீசிய இப்பலத்த புயலினால் வடக்கு பீட்டர்ஸ்பேர்க் பலத்த பாதிப்புக்கு உள்ளானது குறிப்பிடத்தக்கது.

## குண்டுவெடிப்புசம்பவத்திற்கு பிரதமர் ராவ் கண்டனம்

(சென்னை)

சென்னையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் அவர் வெளியிட்ட அறிக்கையொன்றில் மேலும் இச்சம்பவத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## பொஸ்னியாவின் தலைநகர் பாதுகாக்கப்பட வேண்டும்

### நேட்டோ தீர்மானம்

(பிரேசல்ஸ்)

பொஸ்னியாவின் தலைநகர் சரயேவோவை சேர்பியர்கள் கைப்பற்றுவதை நிறுத்த வேண்டுமென்று அமெரிக்கா தெரிவித்த யோசனையை நேட்டோ நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. அத்துடன் பொஸ்னியத்தலைநகரை காப்பாற்றுவதற்காக விமானத் தாக்குதல்கள் நடத்துவது பற்றியும் அந்நாடுகள் ஆராய்ந்து வருகின்றன.

சேர்பியர், குரோசியர் மற்றும் பொஸ்னியர்களுக்கு இடையே ஜெனிவாவில் நடக்கும் முத்தரப்பு பேச்சு வெற்றியளிக்க வேண்டும் என்றும், பொஸ்னியத் தலைநகர் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், பொஸ்னிய மக்களுக்கு மனிதாபிமான உதவி வழங்கும் ஐ. நா. படையினருக்கு பாதுகாப்பு வேண்டும் என்றும் நேட்டோ நாடுகளின் தூதுவர்கள் தமது தீர்மானத்தில் மேலும் வலியுறுத்தியுள்ளனர்.

## இஸ்ரேலின் தாக்குதல்கள் சட்டங்களை மீறியவை

### சர்வதேச செஞ்சிலுவை அறிக்கை

(பெய்ரூட்)

லெபனான் மீது இஸ்ரவேல் படைகள் சர்வதேச சட்டங்களையும் மீறி எறிகணைத் தாக்குதல்களிலும், விமானத் தாக்குதல்களிலும் ஈடுபட்டிருந்ததாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் குற்றம் சாட்டியிருக்கின்றது.

கடந்த வாரத்தில் இஸ்ரேல் படைகள் மேற்கொண்டிருந்த தாக்குதல்கள் தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வெளியிட்டிருக்கும் ஓர் அறிவிப்பில் இந்த தாக்குதல்களால் 130 பேர் கொல்லப்பட்டதாகவும், 600க்கும் மேற்பட்டோர் காயமுற்றதாகவும் 2,50,000க்கும் அதிகமானோர் அகதிகளாகியிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

லெபனானின் கிராமங்கள் மீது மட்டுமன்றி மயானங்கள் மீதும் கூட இஸ்ரேல் படையினர் தாக்குதல்களை நடத்தியதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்க யோசனை பாலஸ்தீனருக்கு ஏற்றதல்ல

பாலஸ்தீனத்தின் கட்டுப்பாட்டிலிருந்து கிழக்கு ஜெருசலேமைதள்ளிவிட அமெரிக்கா முனைந்து வருகிறது என்று பாலஸ்தீன விடுதலை இயக்கம் குற்றம் சாட்டியுள்ளது.

காஸாப்பகுதியையும்,ஜோர்தான் மேற்குக்கரைப்பகுதியையும் மட்டும் பாலஸ்தீனியர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவேண்டும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ள யோசனையில் ஜெருசலேம் உட்படுத்தப்படவில்லை என்றும் அதனால்இந்த யோசனை பாலஸ்தீனியர்களுக்கு ஏற்புடையதல்ல என்றும் பாலஸ்தீனிய விடுதலை இயக்க முக்கிய உறுப்பினரான யாஸீர் ஆபித் ரப்போ கூறியுள்ளார்.

## உளவுச் செய்மதி வெடித்துச் சிதறியது

அமெரிக்காவின் இராணுவ உளவுச் செய்மதி ஒன்று அண்மையில் வானில் வெடித்துச் சிதறியுள்ளது. டிட்டான் 4 ராக்கெட் தாங்கிச் சென்ற இந்தச் செய்மதி கடந்த திங்களன்று வானில் ஏவப்பட்ட சில நிமிடத்தில் வெடித்துச் சிதறியுள்ளது.

நல்லூர் இனி நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

ஈழநாதம்

# மத்திய புலனாய்வுத்துறை விசாரிக்க வேண்டும்

## ஜெயலலிதா கோரிக்கை

(சென்னை)

(சென்னை ஆர். எஸ். எஸ். தலைமையலுவலக குண்டு வெடிப்பு சம்பவத்தை மத்திய புலனாய்வுத்துறை மேற்கொள்ள வேண்டும் என முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கேட்டுள்ளார். நேற்று அவரை சந்தித்த மத்திய உள்துறை பாதுகாப்பு அமைச்சர் ராஜேஷ் பைலட்டிடம் அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

எனினும் சென்னையை விட்டு புறப்படமுன் விமான நிலையத்தில் செய்தியாளரிடம் பேசிய அமைச்சர் ராஜேஷ் பைலட் குண்டுவெடிப்பு விசாரணையை சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் என்ற ஜெயலலிதாவின் கோரிக்கையை ஏற்க முடியாது என்றார். இப்பிரச்சினை அவ்வளவு சிக்கலாக தெரியவில்லை மாநில பொலிஸாரே இதை கையாள முடியும் என்றார்.

இந்த குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பான செய்தி இரு மணி நேரம் தாமதித்தே ஜெயலலிதாவிற்கு அறிவிக்கப்பட்டது. மாநில அரசின் நிர்வாகத்தில் தகவல் பரிமாற்றத்தில் மெத்தனப்போக்கே இது என அமைச்சர் ராஜேஷ் பைலட் மேலும் தெரிவித்தார்.

இதே சமயம் வெடிகுண்டு சம்பவத்தை மாநில அரசு ஆளுநருக்கு உடனடியாக தெரிவிக்கவில்லை என்ற குற்றச்சாட்டை முதலமைச்சர் ஜெயலலிதா மறுத்துள்ளார்.

தாம் நேற்று முன் தினம் திண்டுகல் செல்ல விமான நிலையம் சென்று கொண்டிருக்கும் போது குண்டுவெடிப்பு பற்றிய தெளிவற்ற முதலாவது தகவல் தமக்கு தரப்பட்டதாகவும் ஜெயலலிதா கூறினார். முழுவிபரமும் தெரியாத நிலையில் தாம் பயணத்தை தொடர்ந்ததாகவும் இந்த சம்பவத்தின் முழு விபரத்தையும் தாம் முன்னதாகவே அறிந்திருந்தால் பயணத்தை தொடர்ந்திருக்க மாட்டேன் என்றும் அவர் கூறினார்.

# சென்னைக் குண்டுவெடிப்பு புலிகளுக்குத் தொடர்பில்லை

## தமிழக காவல்துறை அறிவிப்பு

(சென்னை)

சென்னை ஆர் எஸ். எஸ். அலுவலகத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பிற்கு விடுதலைப் புலிகள் காரணம் என்று வெளியான செய்திகளை தமிழக பொலிசார் நிராகரித்து விட்டனர். ஆர். எஸ். எஸ். இந்துமத குழுவிற்கு எதிராக செயற்பட விடுதலைப் புலிகளுக்கு காரணமேதுமில்லைஎன பொலிசார் தெரிவித்தனர்.

ஆனால் குண்டுவெடிப்பிற்கு புலிகளேகாரணம்என பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழக தலைவர்களில் ஒருவரான கிருஷ்ணமூர்த்திகுற்றஞ்சாட்டியுள்ளார். இச்சம்பவம் இந்திய எல்லையை தாண்டிய வெளிநாட்டின் சதி என பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான எல். கே. அத்வானி கூறியுள்ளார்.

இதேவேளை நேற்று முன் தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் இறந்தோர் தொகை 11ஆக உயர்ந்துள்ளது. நேற்று திருப்பூரில் இரு முஸ்லிம்கள் கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்டனர். இதனால் ஒரு முஸ்லிம் பலியானார். மற்றையவர் படுகாயமடைந்தார். இதனையடுத்து தமிழகத்தில் மதக்கலகம் வெடிக்கலாம் என்ற அச்சநிலை காரணமாக பொலிஸ் ரோந்து தேவைப்படும் இடங்களில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மூவர்

அங்கு பலாலி விமான நிலையத்தினூடாக இவர்கள்இன்று கொழும்பிற்கு புறப்பட்டுச் செல்கின்றனர்.

கொழும்பு செல்லும் இவர்கள் உண்ணாவிரதமிருக்கும் தமது உறவினரின் விடுதலை தொடர்பாக சிறிலங்கா அ...

# தமிழக அரசு பதவி விலகவேண்டும்

## வாழப்பாடி கோரிக்கை

(சென்னை)

...

# "ஒளிவீச்சு" வீடியோ சஞ்சிகை

(யாழ்ப்பாணம்)

நிதர்சனம் தயாரிப்பான ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகை இன்று மாலை நான்குமணிக்கு நிதர்சனம் ஒலி ஒளி தொழில் நுட்பக் கல்லூரியில் காண்பிக்கப்படவுள்ளது.

இது 1993ஜூன்மாத வெளியீடாகும்.

# கோழிகளுக்கு தடுப்பூசி

(வடமராட்சி)

கடற்புலிகள் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரால் பொலிகண்டி கிழக்கு மக்கள் படிப்பகத்தில் வைத்து நாளை கோழிகளுக்கு தடுப்பூசி ஏற்றப் படவுள்ளது. (யோ)

# காரைதீவு அகதிமுகாமை மூடிவிடத் தீர்மானம்

(கல்முனை)

காரைதீவு அகதி முகாமை மூடிவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. 199) ஜூன் 16-ம் திகதி ஆரம்பிக்கப்பட்டஇம்முகாமை அடுத்த மாதம் 30-ம் திகதியுடன் மூடிவிட தீர்மானிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இம் முகாமில் தற்போது 660 குடும்பங்களைச் சேர்ந்த 2658 தமிழ் அகதிகள் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது இம் முகாமை மூடிவிட எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களால் இம் முகாமில் தங்கியுள்ளோரின் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளதாக நம்பப்படுகிறது.

கடந்த வாரம் கொழும்பில் இருந்து வந்த சமூக சேவைத் திணைக்கள உயர் அதிகாரிகள் இம் முகாமில் கணக்கெடுப்பு ஒன்றினை நடாத்தினர்.

# இலவச கண் பரிசோதனை

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி லியோ கழகம் நடாத்தும் இலவச கண் பரிசோதனை நல்லூர்மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் எதிர் வரும் 11 ஆம் திகதி புதன்கிழமையும் எதிர் வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் காலை 8. 30 மணியில் இருந்து நண்பகல் 12. 30 வரையும், மாலை 3. 00 மணியிலிருந்து மாலை 5. 30 மணிவரையும் நடைபெறவுள்ளதாக மேற்படி கல்லூரி லியோ கழகச் செயலாளர் செல்வி தி. நயனி தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகரசபை பாடசாலை வைத்திய அதிகாரி திருமதி கே. பாலயோகம், யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி, வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் ஆகியவர்களின் ஆதரவுடன் இவ் இலவச கண்பரிசோதனை நடாத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## இந்தியா வெற்றி

கொழும்பில் சிறிலங்கா-இந்திய அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியானதுமான டெஸ்ற் கிரிக்கெட்போட்டி வெற்றிதோல்வியின்றி நேற்றுமுடிவடைந்தது.

# வவுனியா ரயிலில் வெளிநாட்டவரிடம் கொள்ளை

(கொழும்பு)

கடந்த சனி இரவு வவுனியா இரவு தபால் வண்டியில் சில பயணிகளிடம் பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன தொடர்பாக பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது அன்றைய தினம் இந்த ரயிலில் படுக்கைவசதி கொண்ட இருக்கைகளை பதிவு செய்த இருவர் இரவு அப்பெட்டியின் உதவியாளர்களைத் தாக்கி வெளிநாட்டவர்களும் உள்நாட்டவர்களும் உள்ள உறங்கலிருக்கை பகுதியை காட்டுமாறு மிரட்டினர். இவர்கள் பின்னர் இரு ஐரிஷ் பிரஜைகளிடமிருந்து 16 ஆயிரம் ரூபாவையும் 300 அமெரிக்க டொலர்களையும் 100 ஸ்ரேலிங் பவுண்களையும் கொள்ளையிட்டனர்.

உள்ளூர் பிரயாணி ஒருவரிடமிருந்த தங்கச்சங்கிலி நான்கு தங்கமோதிரம் என்பவற்றையும் அபகரித்தனர். இக்கொள்ளையில் ஏழுபேர்ஈடுபட்டனர். கொள்ளையர்கள் வெல்லாவ பகுதிக்கு அருகில் ரயிலில் இருந்து குதித்து தப்பிவிட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# 1000பரல் மண்ணெய்

பருத்தித்துறை இறங்குதுறைக்கு "ஐலண்ட்றைட்" என்ற புதிய கப்பல் ஆயிரம் பரல் மண்ணெண்ணெயுடன் நேற்றுக்காலை 10.30மணிக்கு வந்து சேர்ந்தது.

இக் கப்பலில் மேலும் தீப்பெட்டிகள், கொப்பி வகைகளும் வந்தன. எண்ணெய் பரல்கள் இறக்கும் வேலைகள் உடனேயே ஆரம்பமாகியது.

அதே சமயம் 'வாதுவ' 'குமாரி' கப்பல்களிலிருந்தும் பொருள்கள் இறக்கப்பட்டன. இன்றுடன் பொருள்களை இறக்கி முடிக்கும் 'வாதுவ' கப்பல் இன்று கொழும்பு புறப்படும். (யோ)

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக

# தேர்தல் ஆணையாளர் அறிக்கையை ஆராய குழு

1988 ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் தொடர்பாகவும் 1989 பெப்ரவரியில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தல் தொடர்பாகவும் தேர்தல் ஆணையாளர் சமர்ப்பித்த அறிக்கைகள் தொடர்பாக ஆராய பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளரின் இந்த அறிக்கை தொடர்பாக பொதுமக்கள் கருத்துக்களை தற்போது தெரிவுக்குழு கோரியுள்ளது. எதிர்க்கட்சிகள் கொடுத்த நெருக்கடிகளை அடுத்து இந்த இரு தேர்தல்கள் தொடர்பாகவும் தேர்தல் ஆணையாளர் அறிக்கைகளை முன்னதாக வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இயங்காத நிலையில் பற்சிகிச்சை நிலையம்

[வடமராட்சி]

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் பற்சிகிச்சை நிலையம் சுமார் ஒரு மாதகாலமாக செயலிழந்த நிலையில் உள்ளது. இங்கு பணிபுரிந்த பெண் வைத்திய அதிகாரி விடுமுறையில் சென்றதையடுத்து பதில் வைத்திய அதிகாரி நியமிக்கப்படாததினால் பற்சிகிச்சை நிலையம் மூடப்பட்டுக்கிடக்கிறது.

வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையிலும் பற்சிகிச்சை நிலையம் இதே போன்று மூடப்பட்டு இருப்பதினால் வல்வெட்டித்துறையிலிருந்தும் நோயாளிகள் பருத்தித்துறை வைத்தியசாலைக்கு வந்து ஏமாற்றமடைந்து திரும்புகின்றனர்.

பற்சிகிச்சைக்கு வருகின்ற ஏராளமான நோயாளிகள் பற்சிகிச்சை நிலையங்கள் தொடர்ந்தும் செயலிழந்து இருப்பதினால் செய்வதறியாத நிலையில் காணப்படுகின்றனர். (யோ)

# ஒருமித்த கருத்தை திரட்ட முஸ்லிம் லீக் முயற்சி

தேர்தல்கள் மற்றும் அரசியலமைப்பு திருத்தங்கள் என்பன தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்பாக முஸ்லிம்கள் சார்பில் ஒருமுகமான கருத்தை முன் வைப்பதற்கான முயற்சியில் அகில இலங்கை முஸ்லிம் லீக் தற்போது ஈடுபட்டுள்ளது.

வீடமைப்பு இராஜாங்க அமைச்சரும், முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத் தலைவருமான அல் ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன் முஸ்லிம்கள் மத்தியில் இருக்கும் மூத்த அரசியல்வாதிகள் மற்றும் கல்விமான்கள் போன்றோரை இணைத்து மாநாடு ஒன்றை நடத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3500 குடும்பங்கள்

# இந்த வருட இறுதிக்கு முன்

அரசாங்கத்திடம்

1953 இல் வாழ்க்கைச் செலவு உயர்வைக் கண்டித்தே ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரசு சில தீர்மானங்களை நிறைவேற்றியது. அதற்கமையவே அண்மைக்காலம் வரை மக்கள் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் இன்று ஏழைகளுக்கென வழங்கப்பட்டுவந்த நிவாரணங்களை இன்றைய அரசு வெட்டமுற்படுவது ஏன் என அவர் வினவினார்.

உலகவங்கி மற்றும் சர்வதேச நணய நிதியம் ஆகியவை வழங்கிய ஆலோசனைக்கு அமையவே தற்போதைய அரசு இந்நிவாரணங்களை நிறுத்த முன்வந்துள்ளது.

கடந்த காலத்தில் நிவாரண வெட்டு தொடர்பாக மேற்படி நிதியங்கள் விடுத்த இத்தகைய ஆலோசனைகளை முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கடுமையாக எதிர்த்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் தற்போதைய பிரதமர் அண்மையில் பாரிசிற்கு சென்று 840 மில்லியன் டொலரை கடனாகப் பெற்று வந்தார் இந் நிதி மேற்படி வங்கியின் ஆலோசனைகளை நடைமுறைப் படுத்துவதாக இவர் அளித்த வாக்குறுதியின் அடிப்படையிலேயே வழங்கப் பட்டுள்ளது.

மேலும் எமது நாட்டிற்கு கிடைத்துள்ள மேற்படி கடனில் ஒவ்வொரு நூறுரூபாவிற்கும் 30 ரூபா வீதம் வட்டி செலுத்தப்பட வேண்டியுள்ளது எனவும் அவர் தெரிவித்...

## தமிழக காவல்துறை அறிவிப்பு

(சென்னை)

சென்னை ஆர் எஸ். எஸ். அலுவலகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பிற்கு விடுதலைப் புலிகள் காரணம் என்று வெளியான செய்திகளை தமிழக பொலிசார் நிராகரித்து விட்டனர். ஆர். எஸ். எஸ். இந்துமத குழுவிற்கு எதிராக செயற்பட விடுதலைப் புலிகளுக்கு காரணமேதுமில்லையென பொலிசார் தெரிவித்தனர்.

ஆனால் குண்டுவெடிப்பிற்கு புலிகளேகாரணம்என பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழக தலைவர்களில் ஒருவரான கிருஷ்ணமூர்த்திகுற்றஞ்சாட்டியுள்ளார். இச்சம்பவம் இந்திய எல்லையை தாண்டிய வெளிநாட்டின் சதி என பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான எல். கே. அத்வானி கூறியுள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் இறந்தோர் தொகை 11ஆக உயர்ந்துள்ளது. நேற்று திருப்பூரில் இரு முஸ்லிம்கள் கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்டனர். இதனால் ஒரு முஸ்லிம் பலியானார். மற்றையவர் படுகாயமடைந்தார். இதனையடுத்து தமிழகத்தில் மதக்கலகம் வெடிக்கலாம் என்ற அச்சநிலை காரணமாக பொலிஸ் ரோந்து தேவைப்படும் இடங்களில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

### மூவர்

அங்கு பலாலி விமான நிலையத்தினூடாக இவர்கள்இன்று கொழும்பிற்கு புறப்பட்டுச் செல்கின்றனர்.

கொழும்பு செல்லும் இவர்கள் உண்ணாவிரதமிருக்கும் தமது உறவினரின் விடுதலை தொடர்பாக சிறிலங்கா அரசிற்கு நெருக்கடியை கொடுப்பார்கள்என எதிர்பார்க்கப்படுகின்றது. (யா)

## தமிழக அரசு பதவி விலகவேண்டும்

### வாழப்பாடி கோரிக்கை

(சென்னை)

சென்னை வெடிகுண்டு சம்பவத்திற்கு தார்மீக பொறுப்பேற்று முதலமைச்சர் ஜெயலிதா பதவி விலகவேண்டும் என தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கோரிக்கை விட்டுள்ளார். குண்டு வெடிப்பு சம்பவத்தை தடுக்கும் பொறுப்பில் இருந்து மாநில அரசு தவறிவிட்டது என்றும் அவர் குற்றஞ் சாட்டினார்.

தமிழக காவல்துறை விசாரணையில் தமக்கு நம்பிக்கையில்லை என்றும் மத்திய அரசு முன்னமேஎச்சரித்திருந்தும்தமிழகஅரசு மெத்தனமாகஇருந்துவிட்டது என்றும் அவர் கூறினார். இச்சம்பவம் குறித்து உடனடியாக மாநில ஆளுநருக்கு தகவல் கூறாமையையும் தகவல் கிடைத்தபின்பும் முதலமைச்சர் ஜெயலலிதா திண்டுக்கல்லுக்கு புறப்பட்டு சென்றதையும் அவர் கண்டித்துள்ளார்.

8.30 மணியில் இருந்து நண்பகல் 12. 30 வரையும், மாலை 3. 00 மணியிலிருந்து மாலை 5. 30 மணிவரையும் நடைபெறவுள்ளதாக மேற்படி கல்லூரி லியோ கழகச் செயலாளர் செல்வி தி. நயனி தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகரசபை பாடசாலை வைத்திய அதிகாரி திருமதி கே. பாலயோகம், யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி, வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் ஆகியவர்களின் ஆதரவுடன் இவ் இலவச கண்பரிசோதனை நடாத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

### இந்தியா வெற்றி

கொழும்பில் சிறிலங்கா-இந்திய அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியானதுமான டெஸ்ற் கிரிக்கெட்போட்டி வெற்றிதோல்வியின்றி நேற்றுமுடிவடைந்தது. இதையடுத்து இந்த டெஸ்ற் தொடரில் இந்தியா 1 : 0 என்ற விகிதத்தில் வெற்றி பெற்றுள்ளது.

### ஐ. நா. சபை

அவர்களுக்கு ஏமாற்றத்தை அளித்ததாகும்.

இதேவேளை இத்தீர்வுத் திட்டத்தை கனடாவில் உள்ள அமைப்பு முன்வைத்திருப்பினும் இதில் மேற்குலகைச் சேர்ந்த பல நாடுகளின் கை இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### தமிழர்

எனும் இலங்கைத் தமிழர் கனேடியர் ஒருவரால் தாக்கப்பட்டு காயமடைந்தார்.

ரொன்ரோ நகரில் நடந்த இத் தாக்குதலையும் வேறு பகுதியில் நடைபெற்ற பல இனத்துவேஷ தாக்குதல்களையும் மேயர் ஜீன்லோரன்ஸ் கண்டித்தார்.

அதிகாரி நியமிக்கப்படாததினால் பற்சிகிச்சை நிலையம் மூடப்பட்டுக்கிடக்கிறது.

வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையிலும் பற்...தொடர்ந்தும் செயலிழந்து இருப்பதினால் செய்வதறியாத நிலையில் காணப்படுகின்றனர். (யோ)

## ஒருமித்த கருத்தை திரட்ட முஸ்லிம் லீக் முயற்சி

தேர்தல்கள் மற்றும் அரசியலமைப்பு திருத்தங்கள் என்பன தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்பாக முஸ்லிம்கள் சார்பில் ஒருமுகமான கருத்தை முன் வைப்பதற்கான முயற்சியில் அகில இலங்கை முஸ்லிம் லீக் தற்போது ஈடுபட்டுள்ளது.

வீடமைப்பு இராஜாங்க அமைச்சரும், முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத் தலைவருமான அல் ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன் முஸ்லிம்கள் மத்தியில் இருக்கும் மூத்த அரசியல்வாதிகள் மற்றும் கல்விமான்கள் போன்றோரை இணைத்து மாநாடு ஒன்றை நடத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3500 குடும்பங்கள்

## இந்த வருட இறுதிக்கு முன் புதிதாக குடியமர்த்தப்படுவர்

### அமைச்சர் அத்துகோரள

(கொழும்பு)

மகாவலி அபிவிருத்தித் திட்ட வலயங்களில் இந்த ஆண்டின் இறுதிக்கு முன்பாக 3500 குடும்பங்களை குடியமர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு காணி காணி அபிவிருத்தி அமைச்சர் காமினி அத்துகோரள கூறியுள்ளார்.

குருநாகலில் அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்,

இரண்டாயிரம் ஆண்டளவில் நாடு விவசாயத் துறையில் தன்னிறைவு கண்டுவிடும் என்றும், நாட்டில் 60 சதவீதமான விவசாய நிலங்களுக்கு நிரந்தரப் பாசன வசதிகள் கிடைத்துவிடும் எனவும் தெரிவித்தார்.

## குண்டுவெடிப்பு குறித்து ஆராய சென்னைக்கு மத்திய அமைச்சர்

சென்னையிலுள்ள இந்துமத தீவிரவாத அமைப்பான ஆர். எஸ் எஸ் அமைப்பின்மாநிலத் தலைமை அலுவலகத்தில் நேற்று முன் தினம் நிகழ்ந்த குண்டு வெடிப்பு சம்பவத்தின் பின்னர் எழுந்துள்ள நிலைமைபற்றி ஆராய மத்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் சென்னைக்கு வருகை தந்துள்ளார்.

பிரதமர் பி. வி. நரசிம்மராவின் வேண்டுகோளின்பெயரில் உள்துறை இணை அமைச்சர் சென்னைக்குசென்றிருப்பதாக மத்திய அரச அதிகாரி ஒருவர் புதுடில்லியில் தெரிவித்துள்ளார்.

நிறுத்த முன்வந்துள்ளது.

கடந்த காலத்தில் நிவாரண வெட்டு தொடர்பாக மேற்படி நிதியங்கள் விடுத்த இத்தகைய ஆலோசனைகளை முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கடுமையாக எதிர்த்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் தற்போதைய பிரதமர் அண்மையில் பாரிசிற்கு சென்று 840 மில்லியன் டொலரை கடனாகப் பெற்று வந்தார் இந் நிதி மேற்படி வங்கியின் ஆலோசனைகளை நடைமுறைப் படுத்துவதாக இவர் அளித்த வாக்குறுதியின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டுள்ளது.

மேலும் எமது நாட்டிற்கு கிடைத்துள்ள மேற்படி கடனில் ஒவ்வொரு நூறுரூபாவிற்கும் 30 ருபா வீதம் வட்டி செலுத்தப்பட வேண்டியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

### எதிர்க்கட்சிகள்

வார்த்தைகள் நடைபெற்று வருவதும் இதில் பெரும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி விஜேதுங்க அறிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### பரீட்சை

கான விசேட பகுதி I, பகுதி II வினாத்தாள்களும் அடங்குகின்றன.

மேலும் இவ் வினாத்தாள்கள் நேற்று திருக்கோணமலைக்கு எடுத்து வரப்பட்டதாகவும் அங்கிருந்து "நரோமா" கப்பலில் காங்கேசன்துறைக்கு கொண்டுவரப்பட்டு "குமாரி" கப்பல் மூலமாக இன்று பருத்தித்துறை துறைமுகத்திற்கு எடுத்துவரப்பட்டு யாழ். கல்வித்திணைக்களம் கொண்டு வரப்படுமென யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (பா)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 09-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10567

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-6639, 40-2394, 42-3993, 27-4628, 24-5418, 41-2509, 24 7225, 24-9489, 24-3258, 24-4323, 24-5509, 24-9490, 28-9634, 41-7041, 26-5281, 24-7173, 27-9090, 26-4176, 27-1122, 42-2432.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-4993, 41-9696, 24-4560, 42-3114, 26-6842, 24-4481, 26-6972, 28-5294, 26-5814, 24-7087, 36-3497 (ரெக்ரர்).



## எமது புதிய வெளியீடுகள்

1) தமிழோசை
2) இது எங்கள் தேசம்
3) இனி ஒரு விதி
4) தாயகக் கனவு

❋ தியேட்டரில் பார்க்கும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டவர்களுக்கு ஓர் சந்தர்ப்பம். இப்படங்களை நீங்கள் எம்மிடம் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் புதிய படங்கள் யாவையும் புதிய கசெட்டில் பதிவு செய்து வாடகைக்குக் கொடுக்கின்றோம்.


### குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7177)



### வெலிங்டன் சந்தியில்



# UNIKCO

## COMPUTER CENTRE

- BASIC (Files, Graphics and Sound)
- d BASE III PLUS and MS - DOS
- LOTUS 1-2-3 and MS - DOS
- WORD PROCESSING (Word Star Rel. 5 5) and MS - DOS

புதிய பிரிவுகள்:
14-08-93 (சனி, ஞாயிறு)
13-08-93 (வார நாள் வகுப்புகள்) ஆரம்பமாகின்றன.

மேலதிக விபரங்கட்கு:

37, CLOCK TOWER ROAD, JAFFNA.

(சி-7172)


## மரண அறிவித்தல்

### முதலியார் சுப்பிரமணியம் நடராசா

(இளைப்பாறிய பொலிஸ் வைலஸ்ஒப்பிரேற்றர் கொழும்பு)

முதலியார் சுப்பிரமணியம் நடராசா 9 - 8 - 93 நேற்று காலமாகிவிட்டார். இவர் கனகவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற முதலியார் சுப்பிரமணியம் தக்கம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பிறேமானந் (கப்டன் அனஸ்), பிரபாகரன் (சுவிஸ்), சுதாகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்பிரமணியம், மயில்வாகனம், காலஞ்சென்ற சித்திரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 10 - 8 - 93 காலை 10. 30 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
மனைவி கனகவதி

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு. [5656]


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.